### (vi) தமிழ்நாடு 1968-ம் ஆண்டு பொதுப் பொறுப்பு கழகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிர்வாகத்தை முறைப்படுத்தல்) திருத்த மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 19/1968.)

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1968-ஆம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிர்வாகத்தை முறைப்படுத்தல்) திருத்த மசோதா ௳ ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப் படவேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தமிழ்நாடு 1961-ம் ஆண்டு பொதுப்பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிர்வாகத்தை முறைப்படுத்தல்) (தமிழ்நாட்டுச் சட்டம் 57/1961) சட்டத்தின் 2-வது, 38-வது பிரிவுகளைப் பின்வரும் காரணங்களுக்காக திருத்த இம்மசோதா முற்படுகிறது.

மேற்சொன்ன சட்டத்தின் 2-வது பிரிவைச் சேர்ந்த (28) பகுதியின் (2) உட்பிரிவு, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் "தர எக்கர்" என்னும் சொற்றொடருக்கு விளக்கம் தருகிறது. மேற்சொன்ன சட்டத்தின் 2-வது பிரிவைச் சேர்ந்த (28) பகுதியின் III-வது விளக்கத்தில் விவரித்துள்ள திட்டங்களைத் தவிர மற்றப் பாசன வாயில்களிலிருந்து பாசனம் பெறுகிற சில நன்செய் நிலங்களும் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. இத்தகைய நன்செய் நிலங்களைத் தர எக்கர்களாக மாற்றுவதற்கு தற்போது எந்தவிதமான அளவுகோலும் இல்லை. எனவே, இத்தகைய நிலங்களைத் தர எக்கர்களாக மாற்றுவதற்குரிய அளவுகோலுக்கு வகை செய்வதற்கென மேற்சொன்ன சட்டத்தின் 2-வது பிரிவைச் சேர்ந்த (28) பகுதியில் தக்க விதித்துறை இயற்றுவது அவசியமெனக் கருதப்படுகிறது.

கூட்டுறவுச் சங்கப் பதிவாளர், குத்தகைக்காரர் பண்ணைச் சங்கத்தின் துணை விதிகளில் சொல்லியுள்ள நடைமுறையில் பின்பற்றிய பிறகு, மேற்சொன்ன சங்கத்தின் உறுப்பினர்களில் பெரும்பான்மையினர் செய்து கொள்கிற விண்ணப்பத்தின் மீதோ அல்லது பதிவாளர் தாமாகவோ மேற்சொன்ன சங்கத்தின் துணை விதிகளைத் திருத்துவதற்கு ஷ சட்டத்தின் 38-வது பிரிவு அவருக்கு அதிகாரமளிக்கிறது. இவ்விதித் துறையின் கீழ், பதிவாளர் தாமாகவே துணை விதிகளைத் திருத்துவதற்கு அவருக்குள்ள அதிகாரங்களுக்குத் தடை எதுமில்லை. ஆனால், தமிழ்நாடு 1961-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடுச் சட்டம் 53/1961) 12-வது பிரிவின்கீழ், பதிவான ஒரு சங்கத்தின் செயல் பகுதியை மாற்றுவது அல்லது அச்சங்கம் ஆற்றுகிற பணிகளை மேம்பாடு செய்வது அல்லது மேற்சொன்ன விதிகளில் குறிப்பிடக் கூடிய வேறொரு காரியத்திற்காக மட்டுமே துணை விதிகளைத் திருத்தும்படி உத்தரவு இடுவதற்குப் பதிவாளருக்கு அதிகாரம் உண்டு. மேற்சொன்ன 53/1961 எண் தமிழ்நாட்டுச் சட்டத்தின் 12-வது பிரிவில் கண்டுள்ள விதித்துறைக்கிணங்க பதிவாளர் தாமாகவே துணை விதிகளைத் திருத்தும் அதிகாரங்களைக் கட்டுப்படுத்துவது அவசியமெனக் கருதப்படுகிறது. அவ்வண்ணமே, இம்மசோதாவின் 2-வது பகுதி மேற்சொன்ன சட்டத்தின் 38-வது பிரிவைத் திருத்த முற்படுகிறது.

இவை கூறி இப்பிரேரணையை ஏற்குமாறு பேரவையை வேண்டுகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன

---

௳ 1968 ஆகஸ்ட் 6-ம் தேதியிட்ட தமிழக சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

நெடுந்தலைப்பு, முகப்புரை, முதல் பிரிவு இவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, "இந்த மசோதா நிறைவேற்றப்படவேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

### (vii) தமிழ்நாடு 1968-ம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 20/1968).

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1968-ம் ஆண்டு இந்து சமய—அறக்கட்டளைகள் (திருத்த) மசோதாவினை* ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளவேண்டும்" என முன் மொழிகின்றேன்.

உள்ளூரில் உள்ள கோவில்கள் குறித்து ஏற்படும் சிக்கல்களில் நடவடிக்கை எடுப்பதற்காக அவ்வூர்களிலேயே நிறுவன அமைப்பு ஒன்றை உருவாக்குவதற்காகவும் திறமை, சிக்கனம், திருத்தமுடைமை, விரைவுடைமை முதலியவற்றின் ஆக்கங் கருதியும் தமிழ்நாடு 1926-ம் ஆண்டு இந்து சமயக் கட்டளைகள் சட்டத்தின் கீழ், "கோயிற் குழுக்கள்" (தமிழ்நாடு சட்டம் 2/1927) நிறுவப்பட்டன. இந்து சமயக் கட்டளைகள் வாரியத்தின் மேற்பார்வையில் இவை இயங்கி வந்தன. இக்கோவிற் குழுக்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவோ பிழைபட அவை இயங்கும்போது அவற்றைத் திருத்தவோ வாரியத்திற்கு அதிகாரமளிக்கிற திட்டவட்டமான விதித்துறைகள் எதுவும் அச்சட்டத்தில் இல்லை. ஊதியம் பெறாத மதிப்பியல் உறுப்பினர்களே "கோயிற்குழுக்களில்" இருந்தனர். இந்த கோயிற் குழுக்கள் சரிவர இயங்காததால் அவை கலைக்கப்பட்டு மாவட்டங்களிலே வசதியான இடங்களில், உதவி ஆணையர்கள் நியமிக்கப் பட்டனர். தமது அதிகார வரம்பிற்குள் உள்ள கோயில்களை எளிதில் கண்காணிப்பதற்கேற்ற இடங்களில் இவ்வுதவி ஆணையர்கள் நியமிக்கப் பட்டனர். 1926-ம் ஆண்டு இந்து சமயக் கட்டளைகள் சட்டம் தமிழ்நாடு 1951-ஆம் ஆண்டு இந்து சமய—அறக் கட்டளைகள் சட்டத்தினால் (தமிழ்நாடு சட்டம் 19/1951) ரத்து செய்யப்பட்டது. அச் சட்டத்தின்படி இந்து சமய—அறக்கட்டளைகள் (நிர்வாக) துறை, மாநிலப் பணியின் கீழ் கொண்டுவரப்பட்டது. அதன்படி, வட்டாரக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு, அந்தந்த உதவி ஆணையர்கள் வட்டாரக் குழுவின் தலைவராக்கப்பட்டனர். தமிழ்நாடு 1951-ம ஆண்டு 19-வது சட்டத்தை ரத்து செய்த தமிழ்நாடு 1959-ம் ஆண்டு இந்து சமய—அறக்கட்டளைகள் சட்டத்திலும் (தமிழ்நாடு சட்டம் 22/1959) இவ்வட்டாரக் குழுக்கள் தொடர்ந்து நீடிக்கப் பட்டன. 1959-ம் ஆண்டு 22-வது சட்டத்தின்கீழ், சம்பந்தப்பட்ட உதவி ஆணையாளர் வட்டாரக் குழுவின் செயலாளராக்கப்பட்டுள்ளார். வட்டாரக் குழுவின் விவாதங்களில் பங்குகொள்ள அவருக்கு உரிமையுண்டு. ஆனால் குழுக் கூட்டத்தில் வாக்களிக்கும் உரிமை அவருக்கு இல்லை.

வட்டாரக் குழுக்களின் பணி ஆறுதல் அளிப்பதாக இல்லை எனறும், அவற்றினால் பயன் எதுமில்லை என்றும் சொல்லப்படுகிறது. அரசாங்கம இதை உன்னிப்பாக ஆராய்ந்தது. வட்டாரக் குழுக்கள் எந்த நோக்கங் களுக்காக அமைக்கப்பட்டனவோ அவற்றை நிறைவேற்றத் தவறிவிட்டன என்று அரசாங்கம் கருதுகிறது. எனவே, வட்டாரக் குழுக்களை நீக்கி விட வேண்டும் என்றும், அவை தற்போது செலுத்தி வருகிற அதிகாரங்கள்

---

* 1968 ஆகஸ்ட் 6-ம தேதியிட்ட தமிழகச் சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.